தலைப்பு 166 – நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 166 – நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுன் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிக்கான அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்ப 1 இல் குறிப்பிடும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்கி அனைத்து பொருண்மையான தத்துவங்கள் தொடர்பில் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பிரதம அமைச்சர அலுவலகத்தின், பொதுத்

திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி நிர்ணயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு

அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2022 மற்றும் 2023 ஆண்டுகளிற்காக வருடாந்த பண்டக கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்டவாறு முறையே ரூபா 1,341,918 ஆன 155 பண்டக அலகுகள் மற்றும் ரூபா 275,975 ஆன 119 பண்டக அலகுகள் ஏலவிற்பனை செய்து மற்றும் பராதீனம் செய்திருந்த போதும் அந்த சொத்துக்களின் கிரயத்தை நிலையான சொத்துக்களிலிருந்த அகற்றியிருக்கவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் ரூபா 1,617,893 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த பெறுமதியை 2025 ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	பராதீனம் மற்றும் ஏலவிற்பனை செய்யப்பட்டுள்ள சொத்துக்களின் கிரயத்தை நிலையான சொத்துக்களிலிருந்த அகற்றுதல் செய்ய வேண்டும்.

(ii)	ஏனைய அரச நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த அதாவது நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் ரூபா 46,030,000 ஆன 13 வாகனங்களின் உரிமையை அமைச்சுக்கு சுவீகரிதுக் கொள்ளாது அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலுத் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்காத கிரயம் ரூபா 10,200,000 ஆன 03 வாகனங்கள் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரி சபைக்கு வழங்கியிருந்த போதும் அந்த பெறுமதியையும் சொத்துக்களிலிருந்து அகற்றி இருக்காததால் நிதியல்லாத சொத்துக்கள் மீதி அந்த பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த வாணனங்களின் உரிமையை அமைச்சுக்கு சுவீகரித்துக்கொள்ள கொம்றோலர் நாயகத்திற்கு கோரிக்கை செய்துள்ள போதும் இதுவரை அங்கீகாரம் கிடைத்தில்லை. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 03 வாகனங்களை சுவீகரிப்பதற்கு மோட்டார வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு 2023 ஆண்டின் போது அனுப்பியிருந்த போதும் உரிய தகவலகள் அறிக்கையிடப்படாததனால் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றவதனை மேற்கொள்ளவில்லை.	முன்னைய பதிவையுள்ள நிறுவனத்தின் இணக்கத்தின் மீது அந்த வாகனங்களை நிறுவனத்தின் பெயரில் பதிவுசெய்துக்கொள்ளநட வடிக்கை எடுக்க வேண்டும். ஆமைச்சுக்கு சொந்தமில்லாத வாகனங்களின் கிரயத்தை நிலையான ரொசாத்துக்களின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	முன்னால் இரஜாங்க அமைச்சருக்கு கடமைக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,393,042 பெறுமதியான கெமரா உபகரணங்கள், அச்சிடல் இயந்திரம் மற்றும் மடிக் கணனி 2022 மே 09 ஆம் திகதி நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் மீது அழிந்திருந்ததாக ஆரச்சிகட்டுவ பொலிஸ் நிலைய அதிகாரி (ப.க), அமைச்சுக்கு அறிவித்திருந்தார். எவ்வாறாயினும் அந்த சொத்துக்களின் கிரயத்தை நிதியல்லாத சொத்துக்களிலிருந்து அகற்றிருக்கவில்லை. இந்த உபகரணங்கள் அவசர நிலைமையொன்று மீது முழுமையாக அழிந்திருந்தமை, உபகரணங்களிற்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தரிற்கு கட்டுப்படுத்த முடியுமான எல்லைக்கு அப்பாற்பட்ட சம்பவமாக 2023 மே 11 திகதி சமர்ப்பித்திருந்த நிதிப்பிரமாணம் 104 விசாரணை அறிக்கையில் காட்டப்பட்டிருந்தது. அமைச்சு அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக	இது தொடர்பாக 2024.05.28 ஆம் திகதி பொது திறைசேரி செயலாளரிடம் நி.பி. 104(4) இன் கீழ் நட்டம் தொடர்பான இறுதி அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன் முன்னேற்றத்தை கணக்காய்விற்கு அறிக்கையிடுவாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுருத்தப்பட்டுள்ளது.	அழிந்த சொத்துக்களில் கிரயத்தை உரிய அங்கீகாரத்தின் கீழ் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்யதுடன் சொத்துக்கள் அழிவடைந்ததன் ஊடாக அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை தொடர்பாக நிதிப்பிரமாணம் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வழங்கப்பட்டிருந்த இந்த உபகரணங்கள் அனுமதியின்றி அமைச்சரவை அலுவலகத்திலருந்து வெளியே எடுத்துச் சென்றமை தொடர்பாக விசாரணை குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.		

(ஆ) கட்டு நிதி மீதி

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் ACA-3 படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஏனைய மூலங்களின் பெறுவனவு ரூபா 361,635,417 ஆன போதும் மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 256,924,792 ஆனதால் அதற்கிடையில் ரூபா 104,710,625 ஆன வித்தியாசம் ஆனது.	பதிதலின் போதான தவறொன்றால் இது இடம் பெற்றுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தி தொடர்ப்பு	செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்திக்கு தொடர்ப்பு
(i)	1.6.1(அ)(i)	பராதீனம் மற்றும் ஏலவிற்பனை செய்திருந்த சொத்துக்களின் கிரயத்தை நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றி சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1(அ)(i)
(ii)	1.6.1(அ)(ii) மற்றும் (iii)	நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரி சபையிடம் வழங்கியிருந்த ரூபா 10,200,000 ஆன 03 மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 46,030,000 ஆன 13 வாகனங்களை நிலையான சொத்துக்களிலிருந்து அகற்ற நடவடிக்கை	1.6.1(அ)(ii)

		எடுக்க வேண்டும்.	
(iii)	1.6.1(அ)(iv)	அழிவடைந்த உபகரணங்களின் பெறுமதியை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு தேவையான செயற்பாடுகள் எடுத்தல் மற்றும் அதற்குரியதாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1(அ)(iii)

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50 இற்கு அமைவாக சிக்கனமானதன்மை மற்றும் செயற்திறமை தொடர்பாக கவனம் செலுத்தாது மதிப்பீடுகள் தயாரிக்கப்டுவதன் காரணமாக 30 செலவு விடயங்களில் 52 முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு எஞ்சியிருந்துது.	அமைச்சு அலுவலகத்தின் செலவு நீர்பாசன அமைச்சினால் மேற்கொள்ளல், தோட்ட பிரிவின் கட்டிடங்கள் திருத்தப்படாதமை, கணனி மென்பொருள் பராமரிப்பதற்காக செலவாகாதமை, அமைச்சின் பெயர் மாற்றத்தின் மீது செலவினம் மேற்கொள்ளப்படாமை, செயற்திட்டங்களில் பட்டியல்கள் சமர்ப்பிக்காதமை, வெளிநாட்டு கடன் தொகை விடுவிப்பு/மீள்நிரப்பல் இடை நிறுத்துதல், காணிகள் கைப்பற்றதலின் கடினம் போன்ற காரணங்களினால் நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.	நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் நிதிஏற்பாட்டை குறிப்பாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்க மற்றும் அந்தந்த செலவின விடயங்களிற்கு வருடாந்தம் வழங்கப்படும் நிதிஏற்பாடு குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த தேவையான செயற்பாடு எடுக்க வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

	அவதானிப்புக்கள்			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா.	இணங்காமைகள்		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 104(4)		முன்னால் இராஜாங்க அமைச்சருக்கு இணைத்திருந்த ஜீப் வாகனத்திற்கு விபத்து இடம்பெற்று 2025 சனவரி 20 ஆம் திகதி வரை ஒரு வருடத்திற்கு அதிக காலம் கடந்திருந்த போதும் நிதிப்பரமாணம் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நி.பி.104(4) இறுதி அறிக்கை பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு மற்றும் தேவையான மன் நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களிற்கு அறவுரை வழங்கப்பட்டிருந்தது.	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(4) பிரகாரம் தேவையான பரிசோதனைகள் மேற்கொண்டு விபத்து காரணமாக அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை உரிய பொறுப்புவாய்ந்த நபர்களிலிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட 1992 நிதிப்பிரமாணக் கோவையின் ஏற்பாடுகள் திருத்தப்பட்ட அரச நிதி சுற்றறிக்கையின் 2.3 பந்தி	13,506,764	V-8 வகையின் ஜீப் வாகனத்திற்கு இடம்பெற்ற நட்டத்தை அறவிடுவதற்கு மற்றும் அது தொடர்பாக திறைசேரி செயலாளரிடமிருந்து அல்லது பிரதி செயலாளரிடமிருந்து கட்டளை பெற்றுக்கொள்ள 2025 சனவரி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அரச நிதி திணைக்களத்திற்கு அறிக்கையிட்டு திறைசேரி செயலாளரினால் இது தொடர்பாக ஆலோசனை பெற்றுக்கொள்ள தேவையான முன் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக குறிப்பிடுகிறேன்.	வாகனத்திற்கு இடம்பெற்ற நட்டத்தை பொறுப்புவாயிந்த நபர்களிடமிருந்து அறவிட வேண்டும்.
(இ)	2024 மே 29 ஆம் திகதிய இலக்கம் 02/2024 கொண்ட 1992 நிதிப்பிரமாணக் கோவை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை	1,817,070	ஜீப் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்தின் காப்புறுதியினால் மீள்நிரப்பப்படாத ரூபா 1,817,070 ஆன நட்டத்தை, பொறுப்புவாயிந்த நபர்களிலிடமிருந்து அறவிட	இடம்பெற்ற நட்டத்தின் மொத்த நட்டத்தை மதிப்பிட்டு உரிய முன் நடவடிக்கை மேற்கொள்வதென	வாகனத்திற்கு இடம்பெற்ற நட்டத்தை பொறுப்புவாயிந்த நபர்களிடமிருந்து அறவிட வேண்டும்.

இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகள் திருத்தப்பட்ட அரச நிதி சுற்றறிக்கையின் 02(ஆ) பந்தி	நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறிப்படுகிறேன்

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகளின் கீழ் தோட்ட சமூகத்தில் சமூகத் தலைமைத்துவம் மற்றும் சமூக பங்களிப்புடன் கூடிய ''சன சமூக சபைகள் மற்றும் சந சமூக நிலையங்களை நிறுவுதல்'' குறிப்பிடப்பட்டிருந்த போதும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அந்த பணியை திட்டமிடப்பட்டு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சுக்கு 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதிஏற்பாடு குறைந்ததால் அது 2024 அமைச்சின் செயல் திட்டத்திற்கு உள்ளடக்கப்படவில்லை.	அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய முக்கிய பணிகளை செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு செயல்படுத்த தேவையான மதிப்பீட்டு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும்.

4.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தோட்ட சமூகத்தின் குழந்தைகளினது ஆரம்பக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்வதற்கான விஷேட நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்துவதற்காக வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 583.08 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயல் நடவடிக்கை திட்டத்தினுள் அதற்காக 2 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 7 செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வறாயினும் மீளாய்வாண்டில்	இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், நிதிஏற்பாடு கிடைத்தது 2024.06.26 ஆம் திகதியாகும். அத்துடன் சனாதிபதித் தேர்தலை அறிவித்தமை பாராளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட்டதால் தேர்தல் ஆணைகுழுவினால் சமர்ப்பித்த சுற்றறிக்கையின் பிரகாரம் தோட்ட சமூகத்தின் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால்	தோட்ட சமூகத்தின் குழந்தைகளின் ஆரம்பக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்வதற்காக திட்டமிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

	அவற்றில் 4 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 12.95 மில்லியன் அதாவது 2.2 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.	திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்துக்கொள்ள முடியவில்லை.	
(ஆ)	பெருந்தோட்டத் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தோட்டத் துறையின் அனைத்து பயனாளிகளுக்காக தரவு கணிப்பாய்வொன்று மேற்கொள்ளல் மற்றும் பாதை அபிவிருத்தி ஆகிய பணிகளிற்காக முறையே ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியனாக ஒதுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டினுள் குறித்த பணிகளை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் காரணமாக அத்தியாவசியமான மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிதிஏற்பாட்டை பயன்படுத்தி தொடர்புடைய பணிகளை விரைவாக நிறைவேற்ற வேண்டும்.
(இ)	இந்திய உதவியுடன் 4,000 வீடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2024 திசெம்பர் 31 அன்று 3,972 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் 349 வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அதுபோன்றே இதன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 150 வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் நீர் வழங்குவதற்காக ரூபா 25 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 அன்று ரூபா 16.75 மில்லியன் செலவில் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 100 வீடுகளுக்கு நீர் வழங்கல் வழங்கப்பட்டிருக்கவில்லை.	பல்வேறு நடைமுறை காரணங்களால் தாமதமாகியுள்ள தண்ணீர் விநியோகத்தை உடனடியாக வழங்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	இந்த நிதிஏற்பாடுகளை உரிய நோக்கத்தை நோக்கி செலுத்தப்பட்டு அந்த மக்களினது தேவைகளை விரைவில் நிறைவேற்றுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகுவதால் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டவாறு பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	1950 இன் 09 ஆம் இலக்க கொண்ட காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரகாரம், 05 நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்கு	நிலவும் பொருளாதார மந்தநிலை காரணமாக அந்த நிதி ஏற்பாடு திட்டமிட்டவாறு பெற்றுக்கொள்ள	மேலும் தாமதங்களைத் தடுத்து நிர்மாணப் பணிகளை

	மற்றும் பதுளை நகரப்புற கழிவுநீர் மற்றும் கழிவுநீர் தொகுதியின் சுத்திகரிப்பு அலகு நிர்மாணிப்பதற்கு பெற்றுக் கொண்ட காணிகளிற்காக 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 11 சந்தர்ப்பங்களில் காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த காணிகளில் நீர் வழங்கல் செயற்திட்டத்துடன் தொடர்புடைய நிர்மாணப் பணிகள் 2024 ஜூன் 30 ஆம் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை.	முடியவில்லை. அதனால் நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ளும் வரை செயற்திட்டம் தற்காலிகமாக இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளது.	மேற்கொண்டு மக்களுக்கு எதிர்பார்க்கப்படும் நலன்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்படும் 10,000 வீடுகள் செயற்திட்டத்தின் கீழ் ஹட்டன், கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் 2024 திசெம்பர் 31 அன்று 459 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பல்வேறு கட்டங்களில் இருந்ததுடன் மேலும் 5 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் 200 வீடுகளைக் நிர்மாணிப்பதற்கு ரூபா 3,600 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும அதன் நிதி முன்னேற்றம் ரூபா 496.69 மில்லியன் மாத்திரம் அதாவது 14 சதவீதம் ஆனது. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திற்காக ரூபா 300 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் 2024 திசெம்பர் 31 திகதி வரை அதன் நிதி முன்னேற்றம் ரூபா 65.40 மில்லியன் அதாவது 22 சதவீதம் ஆனது.	செயல்படுத்தும் நிறுவனங்களை அழைக்கப்பட்டு இந்த வீடுகளைக் நிர்மாணிப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய பௌதீக முன்னேற்றம் 33 சதவீதம் ஆகும். மின்சார விநியோகத்திற்காக இலங்கை மின்சார சபைக்கு 22 செயற்திட்டங்களுக்கு ரூபா 66,395,004.35 செலுத்தப்பட்டுள்ளதுடன் செயற்திட்டங்களுக்கு தாமதமின்றி மின்சாரம் வழங்குவதற்கும், மதிப்பீடுகள் வழங்கப்படாத செயற்திட்டங்களுக்கான மதிப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அறிவூட்டப்பட்டுள்ளது. நீர் விநியோகத்தை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பாக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுபிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. 21 செயற்திட்டங்களுக்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன	-மேறபடி-
(இ)	தோட்டப் பகுதியில் 2000 பயனாளர் குடும்பங்களுக்காக இந்திய உதவி மற்றும் அரசாங்க நிதிஏற்பாடுகளின்	77 உறுதிகள் வீடுகளின் குடியிருப்பை உறுதிப்படுத்தும் வரை தோட்ட சமூகத்திற்காக புதிய கிராமங்கள் அபிவிருத்தி	பொருத்தமான முறைஅமயொன்றின் மீது உறுதிகளை விரைவில்

	கீழ் மற்றும் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்கு 2024 ஆம் ஆண்டில் தெளிவான உறுதிகளை வழங்குவதற்காக ரூபா 22.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் 716 உறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 1081 உறுதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.	அதிகாரசபையினால் வைத்திருக்கப்படுகின்றதுடன் 281 உறுதிகள் காணி மறுசீர்திருத்த ஆணைக்குழயிடமிருந்து பெற்றுக்கொள்ள உள்ளன. ரூபா 22.6 மில்லியனில் ரூபா 7.9 மில்லியன் நிலஅளவை திட்டங்களை வரைவதற்கு செலவிடப்பட்டுள்ளதுடன் 2006 வீடுகளில் 1080 வீடுகளுக்கு உறுதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. காணி சீர்திருத்த ஆணைக்குழு உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொண்தன் பின்னர் முன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளனது.	வடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவினால் செயற்படுத்தும் புதிய குடியிருப்பு மற்றும் பசுமை தங்க வீடமைப்பு நிகழ்சித்திட்டத்தின் கீழ 2017-2021 ஆண்டுகளில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட 629 வீட்டு அலகுகள் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் நிறைவு செய்திருந்ததுடன் ஆண்டு 2016 - 2021 ஆண்டுகளில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட 420 வீட்டு அலகுகள் 2025 ஆண்டில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 2018 – 2021 காலத்தினுள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட 420 வீட்டு அலகுகளில் 397 வீட்டு அலகுகள் 2025 பெப்ரவரி 28 திகதிவரை நிறைவு செய்திருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான BSR மதிப்பின்படி ஒப்பந்தங்களை நிறைவு செய்ய முடியவில்லை. பகுதியளவு கட்டப்பட்ட வீடுகளின் மீதமுள்ள பகுதிகளை முடிக்க அமைச்சரவையினால் கிடைத்த அங்கீகாரத்தின் மீது 300 வீட்டு அலகுகள் 2023 ஆம் ஆண்டிலும் 329 வீட்டு அலகுகள் 2024 ஆண்டிலும் நிறைவு செய்யப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 767 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 397 வீட்டு அலகுகளின் பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.	இந்த வீடுகளை விரைவாக முடித்து சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

4.4 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நீர் தொழில்நுட்பத்திற்காக சீன-இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்க நிலையத்திற்கு தேசிய போட்டி விலைமணு கோரி சூரிய பெனல் தொகுதியொன்றை வழங்கல்,	செய்தித்தாள் விளம்பரம் மூலம் கால நீட்டிப்புகள் செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை	பெறுகைகள் வெளிப்படைத் தன்மையுடன் செய்யப்படாததால் ஏதேனும் முறைகேடுகள்

இஸ்தாபித்தல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் உள்ளிட்ட பெறுகைக்காக ரூபா 8,160,000 இற்கு தெரிவு செய்யப்பட்ட தனியார் ஒப்பந்த கம்பனியின் கோரிக்கையின் பெயரில் விலைமனு சமர்பிக்க வேண்டிய திகதியை 07 நாட்களால் நீடித்திருந்தது. அது தொடர்பாக பத்திரிகை ஊடாக பகிரங்கப்படுத்தாததால் அதிக விலைமனு தார்கள் விலைமண சமர்ப்பிக்க காணப்பட்ட சந்தர்ப்பம் மற்றும் அதிக போட்டியுடன் மனுதாரர் ஒருவரை தெரிவு செய்ய இருந்த சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது. இந்த சூரிய் பெனல் தொகுதிக்குரியதாக பிரமாணப் பத்திரங்களில் Provisional Sum ஆக ஒதுக்கியிருந்த ரூபா 466,560 ஆன செலவு பட்டியல் மூலம் உறுதி செய்து கொள்ளாது மொத்த தொகையையும் வழங்குனரிற்கு செலுத்தப்பட்டிருந்தது.	எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கொடுப்பனவிற்காக மனுதாரர் சமர்ப்பித்த விலைமனு பெறுமதியை பட்டயம் பெற்ற பொறியியலாளர் வழங்கப்பட்ட நிறைவு செய்த சான்றிதழ் மற்றும் மின்சார சபையின் உட்படிக்கை, சான்றுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது.	இடம்பெற்றுள்ளதா என பரீட்சிப்பற்குட்படுத்த வேண்டும். கிரய மதிப்பீடுகளில் உள்ளடங்கும் ஏற்பாடுகளிற்குரிய (Provisional sums) கொடுப்பனவிற்காக பட்டியல் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நீர் தொழில்நுட்பத்திற்காக சீன இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்க நிலையத்திற்கு சீன அரசாங்கத்திடமிருந்து மானியமாக 2020 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 40,441,639 பெறுமதியான ஒரு நடமாடும் நீர் பரிசோதனை வாகனத்தைப் கிடைத்து 2024 திசெம்பர் அளவில் 4 ஆண்டுகளுக்கு அதிக காலம் கடந்திருந்த போர்தும் 2024 செப்டம்பர் 30 திகதி வரையும் எவ்வித நீர் பரிசோதனை நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாது ரூபா 894,864 பராமரிப்பு செலவுகளைச் செலவிடப்பட்டிருந்தது. நீர் பரிசோதனை நடவடிக்கைகளுக்குத் தேவையான	சீன வழங்குனரால் வழங்கிய விலைப்பட்டியல் பெறுமதியின் அடிப்படையில் நடமாடும் நீர் பரிசோதனை வாகனத்திற்கு மாத்திரம் ரூபா 477,701.50 காப்பீட்டுத் தொகை பெறப்பட்டுள்ளது. அதனால் மீண்டும் ஒருமுறை நடமாடும் நீர் பரிசோதனை வாகனம் மாத்திரம் ரூபா 7,000,000 இற்கு மதிப்பிடப்பட்டு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. வாகனத்திற்கு வாகன எண் வழங்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நீண்ட கால தாமதம் காரணமாக, ஓட்டதில் ஈடுபடுத்துவதற்கு முடியவில் இருந்தமையால்	இந்த வாகனத்தைப் பயன்படுத்த எடுக்கப்பட்ட முடிவுகள் விரைவில் செயல்படுத்தப்பட்டு இந்த பரிசோதனை வாகனம் அழிக்கப்படுவதால் ஏற்படும் சேதங்களினால் தடுத்துக்கொள்ள வெண்டும்.

அனைத்து உபகரணங்கள் மற்றும் வசதிகளுடன் கூடிய இந்த வாகனம், ரூபா 7,000,000 ஆக மதிப்பிடப்பட்டு குறைவான காப்பீடு செய்யப்பட்டிருந்தது.	ஏதேனும் தொகையொன்று பராமரிப்பு செலவாக செலவிட வேண்டியிருந்தது.. இந்த நீர் பரிசோதனை வாகனத்தை பேராதனை பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டிற்காக வழங்க நடவடிக்கை செய்யப்பட்டு வருகின்றன.	

4.6 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38 மற்றும் 38(அ) பிரிவின் பிரகாரம் சுவீகரக்கும் காணிகளிற்காக 38 கட்டளையை வெளியிட்டு இழப்பீடு செலுத்தும் திகதி வரை காணி உரிமையாளரிற்கு வட்டித் தொகை செலுத்த வேண்டும். அவ்வாறு நீர் வழங்கல் மற்றும் நீர்வடிகாலமைப்பு சபையின் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக சுவீகரித்த காணிகளிற்காக ஆண்டு 2 இற்கும் 5 இற்கும் பின்னர் இழப்பீடு செலுத்தியதால் முறையே ரூபா 5,274,634 மற்றும் ரூபா 8,106,778 தொகை வட்டியாக 2024 சனவரி முதல் ஜுலை வரை செலுத்தியிருந்தது. அதற்கு மேலதிகமாக 2017 ஆண்டு முதல் 2021 வரை 11 சந்தர்ப்பங்களில் சுவீகரித்த காணிகளிற்காக 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் ரூபா 10,859,867 வட்டித் தொகை செலுத்தப்பட்டிருந்தது.	ஒவ்வொறு நிறுவனங்களின் ஊடாக பணிகளை மேற்கொள்ளும் போது எடுக்கும் காலத்தின் மீது இழப்பீடு செலுத்தும் காலம் தீர்மானிக்கப்படுகின்றது. அதனால் 38(அ) உப பிரிவின் கீழ் உடமையை விரைவில் பெற்ற போதும் இழப்பீட்டு செலுத்த கனிசமான காலம் செல்லுவதை தவிர்க்க முடியாது.	காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அரச நிதி வட்டியாக செலுத்துவதனை குறைத்துக் கொள்ள வேலைத் திட்டமொன்றை தயார் செய்து கொள்ள வேண்டும். உத்தியோகத்தரின் வினைத்திறமையின்மை காரணமாக அரசிற்று ஏற்படும் நட்டத்திற்காக குறித்த உத்தியோகத்தர் பொறுப்பாக வேண்டியதால் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	முன்னரிலிருந்து நீர் வழங்கல் அமைச்சிற்கு மற்றும் இராஜாங்க அமைச்சரிற்கு இணைத்திருந்த 03 வாகனங்கள் 2023 மற்றும் 2024 ஆண்டில் விபத்திற்குள்ளாகி அன்னளவாக அரசிற்கு ரூபா 70,323,834 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. நிதிப் பிரமானம் 156(i)(ஆ) பிரகாரம் அந்த வாகனங்களை இணைத்திருந்த உத்தியோகத்தர் தமது பொறுப்பை உரியவாறு நிறைவேற்றி உள்ளனரா என	இந்த அனைத்து வாகன விபத்தினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொது திறைசேரியின் அறிவரையை பெற்று தேவையான முன்நடவடிக்கைகளை எடுப்பதாக குறிப்பிடுகிறேன்.	உத்தியோகத்தர்கனி கவனயீனம் மீது நட்டத்தை தீர்த்துக் கொள்ள இயலாது போதல் அரசிற்கு செலவொன்றாகக் கூடாததனால் பொறுப்பான நபர்களிடமிருந்து நட்டத்தை அறவிட வேண்டும்.

	ஒழுங்கான விசாரணை ஒன்றை மேற்கொண்டு அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிட மற்றும் தேவையான ஒழுக்காற்ற நடவடிக்கைளை எடுக்க அமைச்சின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(இ)	திருத்தத்திற்கு அனுப்பிய 04 வாகனங்கள் 2024 திசெம்பர் 01 திகதி வரை 06 மாதம் முதல் 10 மாதம் கடந்துள்ள போதும் திருத்தி மீள் ஒப்படைத்திருக்கவில்லைை. அது தொடர்பாக அமைச்சின் உத்தியோகத்தரினால் உரிய மேற்பார்வையை மேற்கொண்டு இருக்காததுடன் அந்த வாகனங்களை பாவனையின்று அழிவடைய மற்றும் துரப்பிக்க இடமளிக்கப்பட்டிருந்தது.	வாகன திருத்தத்திற்கு அனுப்பும் போது திட்டவட்ட காலத்தினுள் மேற்கொள்ளுமாறு விசேடமாக குறிப்பிட்டு அனுப்பமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	குறுகிய காலத்தில் வாகனங்களை உரியவாறு திருக்கிக் கொள்ள வேண்டும். அரச ஆதனங்களை பாவனையின்று, அழிவடைய மற்றும் துரப்பிக்க இடமளித்தது தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்ற வேண்டியதால் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	'நீரை சிக்கனமாக பாவிக்க மற்றும் நீர் வழங்கள் செயன் முறை' சார்ந்த 6 வீடியோ காட்சிகளை அமைப்பதற்காக ரூபா 1,200,000 தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தியிருந்தது. இந்த 06 வீடியோ கட்சிகளையும் 15 நிமிடம் 26 செக்கன் குறைவாக நிர்மாணித்திருந்ததால் அரசிற்கு ரூபா 617,333 நட்டம் ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப்பிரமானம் 156 பிரகாரம் குறித்த உத்தியோகத்தரிற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக ஆரம்ப விசாரணை இடம்பெறுவதுடன் அது தொடர்பான முன்நடவடிக்கை மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிக்கையிடுமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	உத்தியோகத்தர்களின் கவயீனம் அல்லது பொடுபோக்காக மேற்கொள்ளும் தவறு காரணமாக அரசிற்கு ஏற்படும் நட்டத்திற்காக உத்தியோகத்தர் பொறுப்பேற்ற வேண்டும்.
(உ)	அமைச்சின் மூலம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு நீர் செயற்திட்டம் தொடர்பான ஒப்பந்தத்திற்காக முற்பணம் வழங்கியிருந்த போதும் ஒப்பந்தப் பணிகள் நிறைவு செய்யப்படாமை அல்லது வேலையை இடைநடுவே நிறுத்திய காரணத்தால் செலுத்தியிருந்த ரூபா 1,843,755,280 முற்பணத்தை மீண்டும் அறவிடு 2025 மார்ச் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அந்த ஒப்பந்ததாரரிற்கு செலுத்திய முற்பணத்தை மீள் அறவிடுவது அல்லது மீண்டும் ஒப்பந்தத்தை ஆரம்பிப்பது தொடர்பாக பல சுற்று கலந்துரையாடல்கள் 2024 ஆண்டினுள் செயலாளரின் தலைமையில் நடந்ததுடன் அதன் பிரகாரம் ஓரளவு அறவீடு தாமதமாகின்றது.	பொது நிதி கவனயீனமாக மற்றும் எந்தவித நலனமின்றி மூன்றாம் தரப்பினரிற்கு நீண்ட காலமாக வைத்திருக்க இடமளித்தது தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும். அதனால் அதற்குரிய ஒழுங்கான விசாரணை ஒன்றை நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை

			எடுக்க வேண்டும்.
(ஊ)	தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரிவினால் அரச நிதிஏற்பாட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளிற்குரிய வீடுகளை நிர்மாணிக்க செலவிடப்பட்ட கிரயத்தின் 50 சதவீதம் தொகை நலன்பெறுனர்களிற்கு 4 சதவீத வட்டிக்கு கடனாக வழங்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 வரை 4925 வீட்டு அலகுகளிற்குரிய ரூபா 2,490 மில்லியன் அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அவற்றில் 4,823 வீட்டு அலகுகளிற்கு நலன்பெறுனர்களிடமிருந்து எந்தத் தொகையுமே அறவிடப்படாத கடன் மீதி ரூபா 2,417 மில்லியனாகும். 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட 629 வீடுகளிற்குரிய நலன்பெறுனர்களிடமிருந்து அற்விட வேண்டிய தொகையை 2025 பெப்ரவரி 28 திகதி வரை இனங்கண்டிருக்கவில்லை.	வீடமைப்பு கடன் அறவீட்டை மேற்கொள்வது கடன் மற்றும் மானிய அடிப்படையின் மீது நிர்மாணித்து நலன்பெறுனரிற்கு ஒப்படைத்துள்ள வீட்டு அளகிற்கு மாத்திரமாகும். அந்த நிலைமையை திட்டவட்டமாக உறுதி செய்து கொள்ள பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பிலிருந்து தகவல் கோரப்பட்டுள்ளது. 2022 ஆண்டில் நிர்மாண துறையில் ஏற்பட்ட விலை ஏற்றஇறக்கத்துடன் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளின் பெறுமதி ரூபா 2,880,000 மற்றும் ரூபா 3,150,000 அக அதிகரித்துள்ளது. அதன் பிரகாரம் அந்த வீடுகளிற்காக அறவிடப்படும் வீடமைப்பு கடனை ஆண்டு 15-20 இற்கிடையில் அறவிட அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. குறைந்த சம்பளத்துடன் நாட்சம்பளம் பெறும் தோட்ட சமூகத்திற்கு வழங்கிய வீடமைப்புக் கடன் அறவிட நிவாரணமொன்றை வழங்க அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அமைச்சரிவைக் அனுப்பப்படவுள்ளது.	இந்த கடனை நிவாரண அடிப்படையிலேனும் மீள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	தோட்ட சமூகத்திற்கு வீடுகளை வழங்க 2015 ஆண்டு முதல் 2024 வரை அரச நிதிஏற்பாடு மற்றும் இந்திய உதவியின் கீழ் முறையே வீடுகள் 5,891 மற்றும் 3,980 இனை இரத்தினபுரி, பதுள்ளை, கேகாலை, கண்டி, களுதுறை, நுவரெலிய மற்றும் காலி ஆகிய வலையங்களில் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 1,038 மற்றும் 659 வீடுகள் நலன்பெறுனர்களிற்கு மாத்திரம் 2024 திசெம்பர் 31 திகதி வரை காணி உரிமை உறுதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உறுதி வழங்கும் முன்னேற்றம் அரச நிதிஏற்பாட்டின் கீழ் 17.62 சதவீதம்	இந்திய உதவியின் கிழ் நிர்மாணிக்கப்பட்ட வீடகளிற்காக காணப்படும் வழக்கு நடவடிக்கை முடிவடையாமை, நலன்பெறுனர்களிற்கு வீடு வழங்கிய போதும் உறுதி வழங்கும் போது உரிய நிபந்தனைகளை நிறைவு செய்யாத காரணத்தால் மற்றும் ஆரம்ப நலன்பெறுனர் மரணித்துள்ள சந்தர்ப்பத்தில் உறுதி வழங்கவில்லை.	நிகழ்சித் திட்டத்தை திட்டமிட்டவாறு விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மற்றும இந்திய உதவியின் கிழ் 16.55 சதவிதமுமாகும்.		
(ஏ)	4000 இந்திய வீடமைப்பு நிகழ்சித் திட்டத்தின் கீழ் நுவரெலிய, மாதளை, கண்டி மற்றும் பதுள்ளை ஆகிய மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்ட 655 வீடுகளிற்காக 2024 நவம்பர் 26 திகதி வரை காணி உரிமை உறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உறுதிகளை வழங்குவதில் பல் நடைமுறை விரச்சினைகள் ஏற்பட்டதால் காணி மற்றம் வீடமைப்பு தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக இந்த அதிகார சபையினால் ஆரம்ப முயற்சிகளை துவங்கியுள்ளது.	நலன்பெறுனர்களிற்கு உறுதி வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும்..
(ஐ)	புதிய வாழ்கை மற்றும் பசுமை தங்க வீடு நிகழ்சித் திட்டத்தின் கீழ் 2015 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காலத்தினுள் 5262 வீட்டு அலகுகள் நிர்மாணித்து நிறைவு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் 1722 வீட்டு அலகுகள் நலன்பெறுனர்களிற்கு ஒப்படைக்கப்ட்டுள்ளனவா என்பது தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	நலன்பெறுனர்களிற்கு திறப்பு ஒப்படைக்கப்பட்ட தகவல் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பிலிருந்து கிடைத்தவுடன் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வளங்கப்பட்டுள்ளது.	நிறைவு செய்துள்ள வீடுகளை நலன்பெறுனர்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அது தொடர்பான சரியான மற்றும் நாளாதுவரையான தகவல்களை பேணிக் கொள்ள வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
04 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் கீழ் அனைவருக்கும் சமமான தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களை முன்கொண்டு நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் உள்ள தோட்ட சமூகத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவுவதற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 135 மில்லியனும் 2024 ஆம் ஆண்டில் இந்திய உதவியின் கீழ் உபகரணங்கள் வழங்குவதற்காக ரூபா 300 மில்லியன் மற்றும் வகுப்பறைகளை புதுப்பிப்பதற்காக அரச நிதிஏற்பாடு ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் 2024 திசெம்பர் 31 வரை அதற்குரிய எந்தப் பணியும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	செயற்திட்டங்களை செயல்படுத்துவதற்கான வரைவு புரிந்துணர்வு உடன்படிக்கை பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கு ரூபா 135 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கான அமைச்சரவை அங்கீகாரம் 2024.12.30 அன்று வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்தத் செயற்திட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை 2025.01.16 திகதி இந்திய தூதரக அலுவலகத்துடன் கைச்சாத்திடப்பட்டதுடன் செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.	செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது ஆரம்ப நடவடிக்கைகள் விரைவில் மேற்கொண்ள்ளப்பட்டு வருடாந்த நிதிஏற்பாட்டை செயற்திறனாக பயன்படுத்தி உரிய நோக்கங்களை மேற்கொள்ள வேண்டும்